★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 5563

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam:Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 12உ வெள்ளி (27—7—56) ★ ★ வெளியூர்: ஆடி 13உ சனி (28—7—56) [இதழ் 40

தேசிய ஒழுக்க வளர்ச்சிக்காகத் திட்டமாம்!

ரூ. 5 இலட்சம் கோரப்பட்டுள்ளதாம்

புதுடில்லி, ஜூலை 26—

தேசிய ஒழுக்க வளர்ச்சித் திட்டத்திற்காக ரூ. 5-இலட்சம் ஒதுக்கித் தருமாறு திட்டக்குழுவை, டில்லி கல்வி இலாகா கேட்டிருப்பதாக, உதவி கல்வி மந்திரி டாக்டர் கே. ஸ்ரீமாலி தெரிவித்திருக்கிறார்.

"இந்தத் திட்டம், இளைஞர்கள் ஒரு ஒழுங்குமுறையான வாழ்க்கையை மேற்கொள்ளுமாறு செய்வதற்குத்தான்," என்றும் அவர் கூறினாராம்.

சவமொழி போதனையில் வருணாச்சிரமம்!

வடமொழி கற்க அரிசன மாணவர்களுக்குத் தடை

முஸ்லீம் மாணவர்களை சேர்க்கும் திருத்தம் தோல்வி

பாகுபாடு காட்டும் கல்விக்கூடங்களுக்கு

மானியம் தரமுடியாது என மந்திரியின் மாய்மாலம்

உ. பி. சட்டசபை விவாதத்தில் வெளியான தகவல்

இலட்சுமணபுரி, ஜூலை 27—

"உத்தர பிரதேசத்தில் உள்ள சவமொழிக் கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும் முஸ்லீம்கள் படிக்க விரும்பினால் சேர்த்துக் கொள்ள வேண்டும்' என்ற சோஷலிஸ்டு கட்சி உறுப்பினரின் திருத்தம் ஒன்று சட்டசபையில் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது.

'முஸ்லீம்களுக்கும் இடம் தர வேண்டும்' என்ற கோரிக்கைக்கு ஆதரவாக 7 வாக்குகளும், எதிராக 64 வாக்குகளும் சட்டசபையில் பதிவாயினவாம்.

மேலும், தாழ்த்தப்பட்டவர்களை அனுமதிப்பதிலும் தகராறு கிளப்பப்பட்டிருக்கிறது.

"நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள சவமொழி (சமஸ்கிருதம்) பல்கலைக் கழகத்திலும், ஏற்கனவே உள்ள சவ மொழிக் கல்லூரிகள், பாடசாலைகளிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்படாவிட்டால், அவற்றிற்கு சர்க்கார் ஒரு செப்புக் காசுகூட மானியம் வழங்காது; எந்தவித பாரபட்சம் காட்டப் படுவதையும் சர்க்கார் அனுமதிக்காது,"

என்று, உ. பி. கல்வி மந்திரி ஹரி கோவிந்த் சிங் தெரிவித்திருக்கிறார்.

"அமைக்கப்படவிருக்கும், வாரணாசேய சவமொழிப் பல்கலைக் கழகத்தில், தாழ்த்தப்பட்டவர்களுக்கு ... [illegible] தரவேண்டும்,"

என்று, பல்கலைக் கழக நிறுவன மசோதாவிற்கு சோஷலிஸ்டு உறுப்பினர் ஒருவர் கொண்டு வந்த திருத்தம் குறித்துப் பேசும்போது ஒருவர், 'தாழ்த்தப்பட்டவர்களும் பெண்களும் அந்தக் கல்லூரியில் சேரமுடியாது' என்று கூறியதற்குப் பதிலளிக்கும் போதுதான், மந்திரி, மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

மேலும் பேசும்போது மந்திரி 'அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது தவிர, வேறு சலுகைகளை நாம் வழங்குவதும் சட்ட விதிகளுக்கு முரணானதாகும்' என்றும் அவர் எடுத்துக்காட்டினாராம்.

இந்த மசோதாவிற்குத் திருத்தமாகத்தான், முஸ்லிம்களும் விரும்பினால் சமஸ்கிருதமொழி பயில அனுமதிக்கப்படவேண்டுமென்று கோரிக்கை எழுப்பப்பட்டு, தோல்வியுற்றிருக்கிறது.

ஓடிவரும் அகதிகளின் எண்ணிக்கை

அதிகரித்து வருவது டில்லிக்குக் கவலை தருகிறதாம்

நாகபுரி, ஜூலை 25—

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து ஓடிவரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துவருவது டில்லி சர்க்காருக்கு மிகவும் கவலை தருவதாக அகதி மந்திரி மேகர்சந்த் கன்னா தெரிவித்திருக்கிறார்.

கடந்த ஆறு மாதத்திற்குள் மட்டும் இரண்டு இலட்சம் இந்துக்கள் அகதிகளாக ஓடிவந்திருக்கிறார்கள் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

'இதுவரையில், மேற்கு வங்கத்தில் மட்டும் 30 இலட்சம் அகதிகள் வாழ்வளிக்கப்பட்டிருக்கிறார்கள்; இனி மேற்கு வங்கத்தில் மேலும் அகதிகளை ஏற்றுக்கொள்ள இயலாது,"

என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

"பாகிஸ்தானில், இஸ்லாமிய குடியரசு பிரகடனம் செய்யப்பட்டதை ஒட்டியும், நிலவுகிற பொருளாதார நெருக்கடி, அரசியல் நிலையற்றதன்மை இவற்றினால் சிறுபான்மையினர் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்" என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மிரட்டலுக்குப் பணிந்துவிட்டனரா?

நிலமில்லாத காங்கிரஸ் தியாகிகளுக்கு நிலம் வழங்குவது சம்பந்தமாக சென்னை சர்க்கார் சீக்கிரத்தில் ஒரு முடிவு செய்வார்களென்று தெரிகிறது.

இது சம்பந்தமாக சீக்கிரம் ஒரு முடிவான தீர்மானம் செய்துவிடுவதாகவும், தன்னால் முடிந்ததையெல்லாம் தியாகிகளுக்கு செய்வதாகவும் முதல் மந்திரி, தன்னைச் சந்தித்த தூதுக் குழுவினரிடம் வாக்களித்ததாகத் தெரிகிறதாம்.

15,000 அகதி குடும்பங்கள்

ம. பி. மாநிலத்தில் குடியேற்றப்படுகிறார்கள்

நாகபுரி ஜூலை 25—

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து அகதிகளாக ஓடிவந்துள்ள சுமார் 15 000 குடும்பங்கள், மத்திய பிரதேச மாநிலத்தில் இரண்டு மாவட்டங்களில் சுமார் 22,400 ஏகர் நிலப்பரப்பில் குடியமைக்கப்படுவார்கள் என்று தெரியவருகிறது.

மத்தியப் பிரதேசம், மத்திய பாரத், விந்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களின் அகதி புனரமைப்பு இலாகா அதிகாரிகள் அடங்கிய மாநாடு ஒன்றில், இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

பம்பாய் கோரேகானில் உள்ள ஆரே பால் பண்ணை காலனியில் சுமார் 5,000 கன்றுகள் பசியினாலும், தாகத்தினாலும் மாண்டதாக ராமராஜ்ய பரிஷத் பொருளாளர் சிருபர்களிடம் கூறியுள்ளதாக செய்தி ஒன்று கூறுகிறது.

'மாநில புது அமைப்பு விவகாரத்தை ஒத்திவைக்கக்கூடாது'

'பம்பாய் பற்றிய முடிவு இறுதியானதே'

உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்த் பேச்சு

புதுடில்லி, ஜூலை 26—

'மாநில புது அமைப்பு விவகாரத்தை இனியும் தள்ளிப்போடுவது, ஆக்கவேலைகளுக்கு ஊறு விளைவிப்பதாகும்; ஏனெனில், ஏற்கனவே ஏற்பட்ட தாமதம், பல வேலைகளைத் தடை செய்துவிட்டது புது மாநிலங்கள் எவ்வளவு சீக்கிரம் அமைகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு நல்லதாகும். பின்னர் எல்லோரும் தேசப் புனர்நிர்மாண வேலையில் தங்கள் கவனத்தைச் செலுத்த முடியும்,"

என்று, மக்கள் சபையில் உள்நாட்டு மந்திரி பண்டித பந்த்கூறியுள்ளார்.

மாநில புது அமைப்பு விவகாரத்தை ஒட்டிய தகராறுகள், மசோதா இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டதால் இனி அடங்கிவிடும் எனத் தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

பொறுக்குக் குழுவின் சிபாரிசுகளுடன், மாநில புது அமைப்பு மசோதாவை மக்கள் சபையில் விவாதத்திற்காகத் தாக்கல் செய்து பேசிய அவர் மேலும் கூறியதாவது:—

"பம்பாய் பற்றிய முடிவு குறித்து, இன்னும் ஐந்தாண்டுகள் கழித்து புனர் பரிசீலனை செய்யப்படும் என்று பொறுக்குக்குழு விசேஷமாகக் குறிப்பு எழுதியிருக்கிறது.

"மத்திய சர்க்கார் நேரடிப் பொறுப்பில்விடப்படும் பிரதேசங்கள், மக்கள் சபையின் கண்காணிப்பிற்கு உட்பட்டவை என்பதால், எவரும் அது குறித்துக் கவலைப் படத் தேவை இல்லை.

"மாநில புது அமைப்பு விவகாரம் கடந்த 10 மாதங்களாக விவாதிக்கப்படுகிறது; ஏராளமான தகராறுகள் கிளப்பப்பட்டிருக்கின்றன; இதுபோன்ற விவகாரங்களில் தவிர்க்கமுடியாது எழும்பக்கூடிய எத்தனையோ கஷ்டங்கள் எல்லாம் எப்படி எப்படியெல்லாமோ சமாளிக்கப்பட்டிருக்கின்றன.

"பாதை, மிகவும் கல்லும் முள்ளும் நிறைந்ததாக இருந்தும், முன்னேறியிருக்கிறோம்.

"பொறுக்குக் குழுவின் முடிவுகளுக்குப் பிறகு, மசோதா சபைக்கு வந்துள்ளது. பொறுக்குக் குழு சில முக்கியமான திருத்தங்களையும் செய்திருக்கிறது. எனவே, சபையினர் அவற்றைக் கணக்கிலெடுத்துக்கொண்டு மாநில புது அமைப்புத்திட்டம் எல்லோருடைய நல்லெண்ணத்துடனும் நிறைவேறுவதற்கு உதவ வேண்டும்."

நிலச் சீர்திருத்தம்: சட்டம் கொண்டுவர முடிவு

ஆந்திர மாநிலத்தில் நிலச் சீர்திருத்தத்திற்குச் சட்டம் கொண்டுவர ஆந்திர சர்க்கார் முடிவு செய்துள்ளார்கள்.

இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களில் ரூ. 70 இலட்சம் மோசடி

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, ஜூலை 26—

தேசிய மயமாக்கப்பட்டபின், இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அதிகாரிகள், ஐந்து இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களில் சுமார் 70 இலட்சம் ரூபாய் வரை மோசடி செய்திருப்பதைக் கண்டுள்ளனர்"

என்று, மக்கள் சபையில் ரெவினியூ மந்திரி எம். சி. ஷா தெரிவித்திருக்கிறார்.

இன்னும் சில இது போன்ற மோசடிச் சம்பவங்கள் குறித்து விசாரணை நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும் அந்த மந்திரி தகவல் தெரிவித்திருக்கிறார்.

இந்த மோசடிச் சம்பவங்களின் தன்மை குறித்து, விசாரணை முடியுமுன் தெரிவிப்பது நல்லதல்லவென்றும் அவர் கூறியிருக்கிறார்.

பிரசிடென்சி ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி ரூ. 30 இலட்சம்—பல்லாடியம் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி 13 இலட்சம்—ஆதர்ஷ பீமா கம்பெனி ரூ. 15 இலட்சமும், இந்துஸ்தான் ஐடியல் ரூ. 11,000—என்பதுதான் மோசடி செய்யப்பட்ட ரூ 70 இலட்சத்திற்

(4-ம் பக்கம் பார்க்க)

வகுப்புவாதத்தை வளர்க்கும் காங்கிரசார்

பஞ்சாப் எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டு

சாந்திகார், ஜூலை 24—

"மாநில காங்கிரசில் வகுப்புவாதத்தையும், குரோதத்தையும் வளர்த்துக் கொண்டிருக்கிற சக்திகளை அம்பலப்படுத்த வேண்டும்,"

என்று, பஞ்சாப் சட்டசபையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் கேதார்நாத் சேகல் என்பார் கூறியிருக்கிறார்.

"இந்து - சீக்கிய ஒற்றுமையில் தான் பஞ்சாபின் எதிர்காலம் இருக்கிறது; எனவே, இந்த ஒற்றுமையை அடைவதற்கு எல்லோரும் கட்சி வேறுபாடுகளை மறந்தேனும் பாடுபட வேண்டும்,"

என்றும், அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 27—7—'56 வெள்ளி

தேஷ்முக் துறவின் விளைவு

உறுதியாக நம்பியவண்ணம் இந்தியப் பேரரசின் நிதி அமைச்சர் சிந்தாமணி தேஷ்முக் அவர்களின் பதவித் துறவு ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டது. அதேபோன்று நாம் எதிர்பார்த்திருந்தபடியே அவர் பதவித் துறவுக்குரிய காரணமும் அமைந்துவிட்டிருக்கிறது.

தமது பதவித் துறவுக்காக அவர் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் பயங்கரமான உண்மைகளைக் கொண்டிருப்பவைகளாகும். அவை குறிப்பிட்ட குறைபாடுகளை மட்டுமே சுட்டிக்காட்டும் அளவில் நின்றுவிடக்கூடியதன்று.

அவர் கூறியுள்ள காரணங்கள், இந்தியப் பேரரசு எவ்வாறு இயங்கிவருகிறது என்ற மகத்தான உண்மையை உள்ளடக்கமாகக் கொண்டிருப்பவைகளாகும்.

அவர் குறிப்பிட்டுள்ள காரணங்கள், எழுப்பும் புயல் இந்தியத் துணைக்கண்ட எல்லைக்குள் முடங்கிவிடக் கூடியதன்று. அந்தப் புயல் இந்தியப் பேரரசு இயங்கிவரும் வகை பற்றிய ஒரு புதிய கண்ணோட்டத்தை, உலகப் பெருமக்களிடை உருவாக்கும் வரையில் சென்று நிற்கும்.

இந்தியப் பேரரசின் பெயரால், கூட்டு மந்திரிகளுடன் கலந்தாலோசிக்காமல், எதேச்சாதிகாரமாக இந்தியப் பிரதமர் நடந்துகொண்டு வருகிறார் என்பதுதான், தேஷ்முக் அவர்கள் முதற் குற்றச் சாட்டின் வடிகட்டிய சாராம்சமாகும்.

இதே குற்றச்சாட்டை இந் ...டிக நேரு மீது ஏறகனமவ பல... படையாகச் சாட்டியுள்ளார்கள். அவ்வாறு குற்றஞ்சாட்டியவர்களில் வினோபாபாவேயும், இராசகோபாலாச்சாரியார் அவர்களும் குறிப்பிடத் தகுந்தவர்களாவர்.

'நேரு என்ற தனி மனிதனின் சர்வாதிகாரம்தான் நடைபெறுகிறது. மக்கள் சபை முடிவு என்பதும் மக்களாட்சி என்பதும் வெறும் கண்கட்டு விளையாட்டு' என்று சிறந்த காந்திய வாதியாகக் கொள்ளப்பட்டு வரும் வினோபா, ஒரு முறைக்குப் பன்முறை மனம் திறந்து குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று, 'திட்டக் குழுவும் நேருவும்தான் இந்தியாவை ஆட்சி புரிந்துவருகிறார்கள். மக்கள் சபை முடிவு என்பது வெறும் நகைப்புக்குரியது' என்று இராஜகோபாலாச்சாரியாரும் திட்டவட்டமாக ஏற்கனவே குறிப்பிட்டுள்ளார்.

அவ்விருவர்களும் வெளியிட்ட அம்மறுப்பீட்டிற்குக் கிடைத்திருக்க வேண்டிய அளவு விளம்பரமும் மதிப்பும் உள்நாட்டு மக்களிடம் கிடைக்கப் பெறவில்லை. அவ்விருவர் கருத்திலும் செலுத்தப்பட்டிருக்க வேண்டிய அளவு கவனத்தை இந்த நாட்டு மக்கள் செலுத்தத் தவறிவிட்டனர்.

ஆனல் பதவியைத் துறந்த நிதி அமைச்சர் தேஷ்முக் அவர்களின் குற்றச்சாட்டு, அவ்விருவர் கூற்றுப்போல், உள்நாட்டு மக்களின் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கத் தவறிவிடாது. அதுவுமன்றி, பிற நாட்டு மக்களின் சிந்தனைக்கும் அது விருந்தாக அமையாது போய்விடாது.

இந்தியப் பிரதமர் நேருவின் சர்வாதிகாரப்போக்கை மெய்ப்பிக்க தேஷ்முக் அவர்கள் குறிப்பிடும் காரணங்கள்:—

1. 1955-ம் வருடத்திய மாகிலச் சீரமைப்பு மசோதாவில் கண்டுள்ளதுபோல், மகாராட்டிரத்திலிருந்து பம்பாய் நகரத்தைப் பிரிப்பதென்று சர்க்கார் தீர்மானித்ததற்கான பொறுப்பைப்பகிர்ந்து கொள்ள எனக்கு விருப்பமில்லை.
2. குறிப்பாக, எனது தொகுதியான கொலாபாவுக்கும், பொதுவாக மகாராஷ்டிராவுக்கும், இந்தியாவுக்கும் இவ்வளவு ஜீவாதாரமான நலன்களைக் குறித்த இப்பிரச்சினையில், பிரதம மந்திரி நடந்து கொண்ட முறையைப் பொதுவாக ஆட்சேபிக்க விரும்புகிறேன்.
3. 1955 நவம்பரிலும், 1956 ஜனவரியிலும் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைப் பற்றி நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்துமாறு பம்பாய் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ள இந்தியசர்க்காரால் இயலாமல் போனது அல்லது இந்திய சர்க்கார் விரும்பாததையும் ஆட்சேபிக்கிறேன்.
4. மாநில சீரமைப்பு மசோதா மக்கள் சபையில் வந்து, பரிசீலனைக் கமிட்டியிடம் விடப்பட்டிருக்கும் சமயத்தில், ஜூன் மாத ஆரம்பத்தில் பம்பாய் வருங்காலத்தைப்பற்றி பிரதம மந்திரி அறிக்கை வெளியிட்டது தகாது என்பதும் என் விசேட ஆட்சேபணையாகும்.

இந்தக் காரணங்களை தேஷ்முக் அவர்கள் மனம் கொதித்தே வெளியிட்டுள்ளார்.

இதுமட்டுமன்றி, பண்டித நேருவின் சர்வாதிகார முனைப்பை உறுதிப்படுத்துவதற்கு, அமைச்சரவையைக் கலந்து கொள்ளாமலே தம்மிச்சையாக ஆந்திர மாகாண அமைப்புக் குறித்து முதல் முதலாக அறிவித்ததையும சுட்டிக் காட்டியுள்ளார் தேஷ்முக்.

பம்பாய் கலவரத்தினபோது போலீஸ்துறையினர், தங்கள் வரம்புக்குமீறி நடந்துகொண்ட கொடுஞ்செயலை நீதிபதியைக் கொண்டு ஆராயவேண்டும் என்ற கோரிக்கையை ஏற்க மறுக்கும் இந்தியப் பிரதமர், பஞ்சாபில், ஹுசியார்பூர் போலீஸ் அளவுகடந்தல் பற்றி மட்டும் விசாரித்தறிய முன்வந்ததில் மறைந்துகிடக்கும ஓர வஞ்சனையையும் தேஷ்முக் எடுத்துக்காட்டி இடித்துள்ளார்.

பஞ்சாபியர் என்றால் பரிவு காட்டுவதும், மராட்டியர் என்றால் பழி வாங்க முற்படுவதும் இந்தியப் பிரதமரின் போக்காக இருக்கிறது என்பதையும் எடுத்துக் கூறியுள்ளார் தேஷ்முக்.

ஆனல் இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு இந்தியப் பிரதமர் நேரு சொன்ன பதில் என்ன? மிரட்சியும், மருட்சியும் குளறலும்தான், நேருவின் திருவாயிலிருந்து பதில்களாக வெளிவந்துள்ளன.

"உறுப்பினர் குறிப்பிட்டிருக்கும் எல்லா தகவல்களும் முழுதும் உண்மை அல்ல."

"பம்பாயின் எதிர்காலம் ஐந்து ஆண்டிற்குப்பின் பம்பாய் மக்களால் முடிவு செய்யப்படலாம் என்பது ஒன்றுதான் நான் அதிகப்படியாகக் கூறியது."

"இதுபற்றிய சர்ச்சையில் இறங்க எனக்கு விருப்பமில்லை."

இவ்வாறு கூறி நேரு பண்டிதர் குற்றச்சாட்டை மறுக்க முடியாமலும், உள்ளது உள்ளபடியே ஏற்றுக்கொள்ள விருப்பமில்லாமலும், விவகாரத்திலிருந்து தப்பிச்செல்ல முயற்சித்து இருக்கிறார்.

விரிவான விவாதத்தில் இறங்க பண்டிதர் விரும்பவில்லையாம்.

'சிறந்த ஜனநாயக வாதி' என்று புகழ்ந்து கூறப்படும் பண்டித நேருவின் ஜனநாயக முகமூடியை, தேஷ்முக் அவர்களின் குற்றச்சாட்டுகள் கிழித்தெறிந்து விட்டன. பண்டித நேருவின் உள்ளமும், போக்கும் எத்தகைய சர்வாதிகாரம் கொண்டது என்ற பெரும் உண்மையை, தேஷ்முக் துறவு, உலக மக்களுக்குத் தெளிவாக உணர்த்துவதில் நூற்றுக்கு நூறும் வெற்றி பெற்றுவிட்டது என்பதில் ஐயமில்லை.

'நகுதற் பொருட்டன்று நட்டல்,
மிகுதிக் கண் மேற்சென்று
இடித்தற் பொருட்டு'

என்ற பொய்யாமொழிக்குச் சிறந்தோர் எடுத்துக்காட்டாக தேஷ்முக் அவர்களின் செயல் அமைந்துவிட்டது என்பதில் ஐயமில்லை.

2,600 பெண்களில்!

210 பேர்களுக்கே இடம் கிடைத்ததாம்

திருச்சி மாவட்டத்தில், திருச்சி, கரூர், மாயனூரில் உள்ள மூன்று ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் சேர இவ்வருடம் சுமார் 2,600 பெண்கள் மனுச் செய்ததில், 210-பெண்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டனராம்; இட நெருக்கடி காரணமாக பாக்கி மனுக்கள் நிராகரிக்கப்பட்டனவாம்!

வாய்ச்சொல் வீரர்கள்!

அரிசி போன்ற முக்கிய உணவுப் பொருள்களின் விலை உயர்வைத் தடுக்க சென்னை சர்க்கார் அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாயும், எந்தப் பகுதியிலும் தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்றும் சென்னை விவசாய மந்திரி உறுதி கூறியுள்ளார்.

சென்னை சட்டசபையின் அடுத்த கூட்டம்

சென்னை, ஜூலை 26—

சென்னை சட்டசபை மேல்சபை ஆகியவற்றின் கூட்டுக் கூட்டத்தை ஆகஸ்டு 8-தேதி காலை 11 மணிக்கு சென்னை கவர்னர் கூட்டியிருப்பதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படுகிறது.

அதன் பின்னர், ஆகஸ்டு 9-ந் தேதி முதல் இரண்டு சபைகளும் தனித் தனியாக நடைபெறும்.

சட்டசபைக் கூட்டம் காலையில் 11 மணிக்கும், மேல்சபைக் கூட்டம் மாலை 4 மணிக்கும் நடைபெறும்.

'வழங்காத அதிகாரத்தை பிரதமர் தாமாகவே எடுத்துக் கொண்டார்'

'பம்பாய் பற்றிய முடிவு மந்திரி சபையைக் கேட்டுச் செய்ததல்ல'

'பம்பாய் துப்பாக்கிப் பிரயோகம் குறித்து விசாரணை நடத்த பிரதமர் மறுத்தது நாகரீகமானதல்ல'

பதவியிலிருந்து விலகிய தேஷ்முக் விளக்கம்

பண்டித நேரு, பிரதமர் என்ற முறையில் எதேச்சாதிகாரமான முறையில் எப்படி எப்படி எல்லாம் நடந்து கொண்டு, அநீதிகளுக்குத் துணை நின்றார் என்பதை விளக்கி முன்னாள் நிதிமந்திரி தேஷ்முக் மக்கள் சபையில் தாக்கல் செய்த அறிக்கையின் ஒரு பகுதி நேற்று வெளிவந்தது; இதர பகுதி இங்கு தரப்படுகிறது :—

"பம்பாய் நகரத்தை மராட்டியத்திலிருந்து பிரிப்பதற்கு எனது மனச்சாட்சி இடம் தராது. அப்படிப் பிரிப்பது மராட்டியரின் நலன்களுக்கும் இந்தியாவின் நலன்களுக்கும் ஏற்றதல்ல என நான் திடமாக நம்புகிறேன்.

"பெரிய இருமொழி பம்பாய் மாநிலம் சாத்தியமில்லை என்றால், தனியாக குஜராத்தி மாநிலம், பம்பாய் உள்ளிட்ட மராட்டிய மாநிலம் என இரண்டு தனி மாநிலங்கள் அமைப்பதே உள்ள ஒரேவழி; அதைவிடுத்து, மராட்டியத்திலிருந்து பம்பாயைப் பிரிப்பது பெரிய அரசியல் தவறாகும் என்றும், பம்பாய்பற்றி கடந்த ஜனவரியில் அறிவிக்கும் முன்பே நான் பிரதம மந்திரியிடமும், எனது இதர சகாக்களிடமும் கூறினேன்.

"ஆனல், ஜனவரியில் பம்பாய்பற்றி செய்யப்பட்ட முடிவு முழு மந்திரி சபையின் முடிவல்ல; எனவே நிலைமை எனக்குத் தெளிவானபின், எனது இராஜிநாமாவைத் தந்தேன்.

"சபையில் தாக்கலான மசோதாவில் மாற்றம் ஏதும இல்லாவிட்டாலும், பொறுக்குக்குழு சிபாரிசுக்காகக் காத்திருந்தேன்.

"ஆனல், கடந்த ஜூன் திங்களில், பம்பாயில் பிரதம மந்திரி இது குறித்து அசாதாரணமான முறையில் அறிவித்தததானது, பொறுக்குக் குழு விவாதங்களைப் பாதித்துவிட்டதாகக் கருதுகிறேன்.

"சர்க்காரின் முடிவை எந்தச் சமயத்திலும் அறிவிக்க தனக்கு உரிமை உண்டு என்று பின்னர் அவர் வியாக்கியானம் செய்தது பொருந்தாது. ஏனெனில், அது சர்க்காரின்—மந்திரி சபையின் முடிவல்ல; மந்திரி சபையில் இந்த யோசனை குறித்து விவாதம் நடக்கவில்லை; கடிதம் மூலமாகவும் மந்திரிகளின் கருத்து அறியப்படவில்லை; இந்த விஷயத்தில் விசேஷ அக்கரையுடைய என்னைப் போன்ற மந்திரிகளை எந்தமுறையிலும் கலந்து பேசவில்லை; மந்திரிசபைக் கமிட்டி இதுபற்றி விவாதித்ததா என்பதற்கும் 'ரிகார்டு' இல்லை; இந்தத் தேதி வரையில் இந்த முடிவுபற்றி உத்தியோக பூர்வமான வாசகம் மந்திரிகளுக்குக் கிடைக்கவில்லை.

"மாநில புனரமைப்புபற்றிய விவகாரங்களில் பிரதம மந்திரி உட்பட அதிகாரம் பெறாத சில மந்திரிகள் சட்ட விரோதமான முறையில் சில முடிவுகளைச் செய்து, அவற்றை சர்க்கார் முடிவுகள் என்று அறிவித்திருக்கிறார்கள்; அதற்கு இது ஒரு உதாரணமாகும்.

"ஆந்திர பிரிவினை விஷயத்தில், மந்திரி சபையைக் கலக்காமலேயே பிரதம மந்திரி ஒரு முடிவு அறிவித்தார்.

"பம்பாய் நகரம் மத்திய சர்க்காரின் நிர்வாகத்திலிருக்க வேண்டும் என்று சென்ற ஜனவரியில் அறிவிக்கப்பட்ட முடிவும், மந்திரி சபையை முன்னதாகக் கேட்காமல் செய்யப்பட்ட முடிவுதான்.

"மராட்டியத் தொகுதி ஒன்றிலிருந்து நான் தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்பதற்காகவாவது என்னைக் கேட்டிருக்க வேண்டுமென்பது தான் சாதாரண மரியாதை; அப்படிக்கூடச் செய்யவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டாகும்.

"மந்திரி சபை பூராவும் சேர்ந்து கொடுக்காத அதிகாரங்களை பிரதம மந்திரியும் அந்த மூவர் கமிட்டியும், தாமாகவே எடுத்துக்கொண்டனர் என்பதும் என்னுடைய குற்றச்சாட்டாகும்.

"1955 நவம்பரிலும், 1956 ஜனவரியிலும் பம்பாயில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்களைப் பற்றி விசாரணை நடத்த வேண்டுமென நான் கோரினேன்; இது குறித்து ஆலோசிக்காமலேயே பிரதம மந்திரியும் உள்நாட்டு மந்திரியும் ஆட்சேபித்து, எனக்கு அவமரியாதை இழைத்தனர்.

"விஷயங்களை மூடி மறைப்பதற்கு உடந்தையாயிருப்பதின் மூலம், பிரஜா உரிமைகள் சம்மந்தமான அவர்களுடைய கொள்கைகளுக்கு, அவர்கள் உண்மையாக நடந்துகொள்ளவில்லை என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

"பார்த்தவுடன் சுட்டுக் கொல்லுமாறு பம்பாய் முதன் மந்திரி மொரார்ஜி தேசாய் போலீசாருக்கு உத்தரவிட்டிருந்தார் என்பதை நிரூபிப்பதற்கு சாட்சியமிருந்தது. சுடுவதற்கு முன்பு, வேண்டுமென்றே கண்ணீர்ப் புகையைப் பிரயோகித்தார்கள்; இதனல், மூச்சுத் திணறிப்போன குழந்தைகளும், பெண்களும் அலறிப் புடைத்துக்கொண்டு வெளியே ஓடி வந்தார்கள். அவர்களைத் தான் போலீசார் கண்மூடித்தனமாகச் சுட்டு வீழ்த்தினர்.

"2,500 முறைகள் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது; 80 பேர் இறந்துபட்டனர்; 450 பேர் காயமுற்றனர்; ஆனல் போலீசாருக்கு ஏற்பட்ட சேதம் மிகச் சொற்பம்.

"ஹோசியார்பூரில் நடந்த தடியடிப் பிரயோகம் பற்றி விசாரணை நடத்த முன்வந்த ஆளும் கட்சியினர், பம்பாய் துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விசாரணை நடத்த முடியாதென பிடிவாதமாக மறுத்து வருவது, மராட்டியம் மீதுள்ள வெறுப்பையே காட்டுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

சீனத் தொழிற்சாலை அதிகாரிகள் வேலையிலிருந்து நீக்கம்

பல கோடி பொருள் விரயத்திற்கு பொறுப்பானவர்களாம்

ஹாங்காங், ஜூலை 24—

செஞ்சீனாவில், மஞ்சூரியாவிலிருக்கும் மிகப் பெரிய 'டிரான்ஸ்பார்மர்' தொழிற்சாலையைச் சேர்ந்த தலைமை அதிகாரிகள் பலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருப்பதாக செய்தி ஒன்று வெளிவந்துள்ளது.

இவர்கள், 1952—54-ம் ஆண்டுகளுக்கிடையே, தொழிற்சாலையில் ஏற்பட்ட சுமார் ரூ. 2,30,00,000 நஷ்டத்திற்கும் பொறுப்பாளிகளாயிருந்தவர்களாம்!

இந்தத் தொகை, இவர்களுடைய திறமைக்குறைவான நிர்வாகத்தினால் பாழடிக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறதாம்.

தொழிற்சாலைக்கான சர்க்காரின் திட்டம் பாதி மட்டுமே நிறைவேற்றப்பட்டிருந்த நிலையில், முழுவதும் நிறைவேறிவிட்டதாக இந்த அதிகாரிகள் யோக்கியப் பொறுப்பை மறந்து பொய் அறிக்கை தந்ததாகவும் இவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றனராம்.

தொழிற்சாலைக் கம்யூனிஸ்டு கட்சியின் செயலாளரும் இந்த 'மோசடி'களுக்கு உடந்தையாக இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டு, அவரும் செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறாராம்.

உயிர் வாழும் மொழிகள் தமிழும் - சீனமுமே!

காரைக்குடி, ஜூலை 24—

"மூவாயிரத்திற்கும் அதிகமான மொழிகள் உலகத்தில் உள்ளன. அவற்றில், காலத்தால் பழமையும் இலக்கியத்தால் பெருமையுமுடைய மொழிகள் லத்தீன், எபிரேயம், கிரேக்க மொழி, சீன மொழி, வட மொழி, தமிழ் மொழி முதலியன; இவற்றில் இன்று பேச்சுவழக்கில் உயிரோடிருப்பவை தமிழ் மொழியும், சீன மொழியும்தான்,"

என்று, 21—7—56 மாலை காரைக்குடி சதக்கத்தில் நடைபெற்ற குறள் விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் டாக்டர் ராஜமாணிக்கனார் குறிப்பிட்டார்.

எல்லை சம்பவங்கள்

உயிரிழந்தோருக்கு நஷ்டஈடு

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, ஜூலை 24—

எல்லை சம்பவங்களில் கொல்லப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு தருவதற்கு இணங்க முடியாதென பாகிஸ்தான் கூறிவிட்டதாக இந்தியப் பிரதமர் நேரு மக்கள்சபையில் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், மேலும் பாகிஸ்தான் சர்க்காருடன் தொடர்ந்து நடத்திய பேச்சுவார்த்தைகளின் பலனாக, கடந்த 1955 மே மாதத்தில், ஜெஸோவால் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு நஷ்டஈடு தர மட்டும் பாகிஸ்தான் ஒப்புக்கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இரயில்வேஊழியர்கள்

வேறு வேலைகளுக்கு மனுச் செய்யத் தடை!

புதுடில்லி, ஜூலை 25—

"இரயில்வே இலாகாவில் பணிபுரிவோர் வேறு வெளி வேலைகளுக்கு மனுச் செய்துகொள்ளக் கூடாது,"

என்று இரயில்வே போர்டு தடையுத்தரவு விதித்திருப்பதாகத் தெரிகிறது.

இரயில்வே இலாகாவிலிருப்போர் வேறு வேலைகளுக்கு மனுச் செய்துகொள்ள தாராளமாக அனுமதிப்பது, இரயில்வேயின் இரண்டாம் திட்டத்தினை சமுகமாக நிறைவேற்றுவதற்குத் தடையாக இருக்கக்கூடும் என்று போர்டு கருதுகிறதாம்.

ஒரு சிலருக்கு மட்டுமே இந்த முடிவு ஏமாற்றத்தைத்தரும் என்றும் அனுபவம் பெற்ற இரயில்வே இலாகா ஊழியர்கள் இரயில்வேயிலேயே தரிதமான பதவி உயர்வு பெறுகின்றனர் என்றும் போர்டு கூறுகிறது.

காஷ்மீர்: பாகிஸ்தான் பிரதேசமா?

ஆக்ஸ்போர்டு அகராதி கிளப்பிய விவாதம்

புதுடில்லி, ஜூலை 24—

'காஷ்மீர் பாகிஸ்தானின் பிரதேசங்களுள் ஒன்று' என, ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியில் விளக்கம்தரப்பட்டிருப்பதை ஒட்டி மக்கள் சபையில் கேள்விகள் எழுந்திருக்கின்றன.

1951-ம் ஆண்டு வெளிவந்த அந்த அகராதியின் நான்காம் பதிப்பில், 'காஷ்மீர் பாகிஸ்தானின் பிரதேசம்' என விளக்கப்பட்டிருக்கிறதாம்

இது குறித்து, சதத் அலிகான் மக்கள் சபையில் தெரிவித்ததாவது :—

"அந்த அகராதியை வெளியிட்ட ஆசிரியரிடம் இலண்டனில் உள்ள இந்தியத் தூதவர் இது குறித்துப் பேசியிருக்கிறார். பாகிஸ்தான் என்ற சொல்லுக்கு விளக்கம் தரும்போது, அந்தச் சொல் எப்படி உருவானது என்று விளக்கம் தரும்போது, ஆங்கில எழுத்தான 'கே'—காஷ்மீர் என்பதைக் குறிக்கிறது என்று விளக்கவேண்டி வந்தது என்று அந்த அகராதியின் ஆசிரியர் விளக்கம் கூறியிருக்கிறார்."

இந்தப் பதில் இந்தி மொழியில் இருந்தது என்பதால், இதற்கு ஆங்கில மொழி பெயர்ப்புக் கேட்டிருக்கிறார், தென்னாட்டு உறுப்பினர் ஒருவர்!

உடன் பிரதமர் நேரு கூறினாராம்—"பாகிஸ்தான் நாடாக உருவாவதற்கு முன், அந்தச் சொல் எப்படி உண்டாக்கப்பட்டது என்ற விளக்கமே அகராதியில் இருப்பதாக அகராதி தொகுத்த ஆசிரியர் கூறியிருக்கிறார்.

"'பி' என்ற எழுத்து பஞ்சாபைக் குறிக்கும்; 'ஏ' என்ற எழுத்து ஆப்கனிஸ்தானத்தையும், 'கே' என்பது காஷ்மீரையும், 'ஐ' என்பது ஈரானையும், 'எஸ்' என்பது சிந்துவையும் குறிக்கும் என்று விளக்கப்பட்டிருப்பதாக அந்த ஆசிரியர் கூறியிருக்கிறார்."

நகர்ந்து செல்லும் மின்சார நிலையம்!

ரஷ்யாவுக்காக, நகர்ந்து செல்லும் மின்சார நிலையமொன்று செக்கோசுலவேகியாவில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறதாம்!

அந்நிலையம், 2,500 கிலோவாட் மின்சார சக்தியை உற்பத்தி செய்யும் சக்தி வாய்ந்ததாம்!

பத்தாயிரம் மக்கள் வாழும் ஒரு பட்டணத்திற்கும், அதன் தொழிற்சாலைகளுக்கும் இந்நிலையம் போதுமானதாகும்.

இந்தியாவில் கனரக இயந்திர தொழிற்சாலைகள்

ஆராய்ந்து யோசனைகூற ரஷ்ய நிபுணர்கள் வருகை

புதுடில்லி, ஜூலை 25—

இந்தியாவில் கனரக இயந்திரத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவது சம்பந்தமாய் என்னென்ன தேவைப்படுகிறது என்பதுபற்றி ஆராய்ந்து யோசனை கூறுவதற்காக, மேற்படித் துறையில் அனுபவம்மிக்க நான்கு ரஷ்ய நிபுணர்கள் இந்தியாவுக்கு வந்திருக்கின்றனராம்.

இங்கே தயாரிக்கப்படவிருக்கும் இயந்திர சாதனங்கள்பற்றி அந்த நிபுணர்களிடம் ஆலோசனை கோரப்பட்டு வருகிறதென்றும், அத்தொழிற்சாலை அல்லது தொழிற்சாலைகளை எங்கே அமைப்பது என்பதுபற்றி இன்னும் முடிவு எதுவும் செய்யப்படவில்லை என்றும், மக்கள் சபையில் வர்த்தக தொழிலியல் மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறியுள்ளார்.

5 தொழில்களுக்கு சம்பள நிர்ணய போர்டு

புதுடில்லி, ஜூலை 25—

பல்வேறு தொழில்களுக்கு, 5 அல்லது 6 சம்பள நிர்ணயபோர்டு நிறுவ முடியும் என தான் நம்புவதாக மத்திய தொழிலாளர் மந்திரி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

எந்தெந்தத் தொழில்களுக்கு சம்பள நிர்ணய போர்டு நியமிக்கப்படும் என்பது இப்போது கூற முடியாதெனவும், ஏனெனில், தொழில்பற்றிய விவரங்கள் பல சேகரிக்க வேண்டியுள்ளது என்றும் அந்த மந்திரி கூறியிருக்கிறார்.

குட்டக் குட்டக் குனிவதின் விளைவா?

செங்கோட்டை தாலுகாவின் ஒரு பகுதி சென்னை மாநிலத்துடன் இணைக்கப்படும்பொழுது குற்றாலத்தில் உள்ள தேன் மண்டபத்தைத் தவிர மற்றெல்லா திருவாங்கூர் மாளிகைகளையும், கன்னியாகுமரியில் உள்ள சர்க்கார் முசாபரி பங்களாவையும் திருவாங்கூர் சர்க்கார் கேட்பதாகத் தெரிகிறதாம்!

இந்த மாளிகைகள் சம்பந்தமாக ஆலோசனை செய்ய இரு மாநிலங்களின் அதிகாரிகளும் இங்கு வந்திருப்பதாகத் தெரிகிறதாம்.

காஞ்சி நெசவாளருக்கு உதவி தரப்படும்?

காஞ்சிபுரத்தில் 200 பட்டு நெசவாளர்களுக்கு உதவியளிப்பதற்கு ரூ. 1,74,500 செலவில், பரீட்சார்த்தத் திட்டம் ஒன்று சமீபத்தில் ஆரம்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் இந்திய சர்க்காரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நெசவாளர்களின் கடனைத் தீர்த்து, அவர்களை கூட்டுறவுத் திட்டத்தின்கீழ் கொண்டுவருவது, திட்டத்தின் நோக்கமாகும்.

உ. பி. சர்க்காருக்கு டில்லி யோசனை

உணவுப் பொருள்கள்மீது உ. பி. சர்க்கார் விதிக்கும் பலமுனை விற்பனை வரி நியாயமானதல்லவென்று இந்திய சர்க்கார் கருதுவதாகவும், அதை ஒரே முனை விற்பனை வரியாக மாற்றுமாறு அந்த மாநில சர்க்காருக்கு யோசனை கூறியிருப்பதாகவும் இந்திய சர்க்கார் உணவு இலாகா மந்திரி மக்கள் சபையில் கூறியுள்ளார்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நலனுக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 20,28,00,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மாதவரத்தில் ஒரு பால் பண்ணை

அடுத்த ஆண்டு துவங்கப்படுமாம்

சென்னை, ஜூலை 25—

"சென்னை நகரிலிருந்து எட்டு மைல் தொலைவில் உள்ள மாதவரம் என்ற கிராமத்தில், பால் பண்ணை ஒன்று நிறுவுவதற்காக இடம் தேடப்பட்டு வருகிறது,"

என்று, கால்நடை இலாகா அதிகாரி டாக்டர் பட்டாபிராமன் தெரிவித்திருக்கிறார்.

இந்தப் பண்ணைக்கான ஊழியர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டுவிட்டார்களாம்.

சுமார் 600 ஏகர் பரப்பு, பண்ணைக்காக வாங்கப்படுமாம்.

சில அம்சங்களில் இந்தப் பண்ணை, பம்பாய் ஆரே பால் பண்ணையை ஒத்திருக்குமாம்.

இந்தப் பண்ணையிலேயே பால் கறக்கும் கால்நடைகளைக் கொண்டு வந்து பால் கறந்து நகர மக்களுக்கு விநியோகிப்பதே திட்டமாம்.

இதற்கு சுமார் 120 இலட்சம் ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

துவக்கத்தில் 500 கால்நடைகள் இங்கு சேர்த்துக் கொள்ளப்படும் என்றும், பின்னர் சுமார் 7,000 கால்நடைகள் வரை இங்கு அனுமதிக்கப்படும் என்றும், செலவில் 50 சத விகிதத்தை டில்லி சர்க்கார் ஏற்கும் என்றும், பண்ணை அடுத்த ஆண்டு வேலை துவங்கும் என்றும், அந்த அதிகாரி கூறியிருக்கிறார்.

உடுமலைக்கு அருகில் சர்க்கரைத் தொழிற்சாலை

உடுமலை நகருக்கு அருகில் ரூ. 1-கோடி செலவில், கூட்டுறவு ரீதியில் சர்க்கரைத் தொழிற்சாலை ஒன்று விரைவிலேயே அமைக்கப்படவிருக்கிறதாம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் உடுமலை தாலுகாவின் வசதிகளுக்காக ரூ 37-இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது; அவ்வசதிகளில், குமரலிங்கம், குடிமங்கலம் ஆகிய இடங்களில் இரு உயர்நிலைப் பள்ளிகளும், அரிசனக் குடும்பங்களுக்கு 600 வீடுகளும், முக்கிய கிராமங்களுக்குத் தண்ணீர் வசதியும், ஒரு கால்நடை மருத்துவ மனையும் உட்படுத்தப்பட்டுள்ளனவென்றும் தெரிகிறது.

மந்திரிகள் எண்ணிக்கை மேலும் வளரும்

புதிய ரெவினியூ இலாகா நிறுவுவதின் விளைவு

அடிக்கடி மாறும் டில்லியின் நிர்வாக அமைப்பு

புதுடில்லி, ஜூலை 25—

நிதி மந்திரி இலாகாவில் புதியதொரு ரெவினியூ இலாகாவை நிறுவுவது பற்றி டில்லி சர்க்கார் தீவிரமாக யோசித்துக்கொண்டிருக்கின்றனராம்!

நிதி இலாகாவில் ஏற்கனவே பொருளாதார விவகார இலாகா, கம்பெனிச் சட்ட நிர்வாக இலாகா, மத்திய ரெவினியூ போர்டு, இன்னும் சில பிரிவுகள் முதலியனவெல்லாம் இருக்கின்றன.

என்றாலும், மத்திய ரெவினியூ போர்டு—வருமான் வரி எஸ்டேட் வரி, கஸ்டம்ஸ், சுங்க வரி, முதலியனவற்றை எல்லாம் கவனித்துக் கொள்ளவேண்டியிருப்பதால் அதிக தொல்லைகள் இருப்பதாயும், தனியாக ஒரு ரெவினியூ இலாகா அமைப்பது வேலைகளைச் சுலபப்படுத்தும் என்றும் சர்க்கார் கருதுகிறதாம்.

இந்த இலாகா அமைத்ததும், இதற்கென ஒரு செயலாளர் நியமிக்கப்படுவோர் என்பதுடன், ஒரு மந்திரியும் தேவைப்படுவோர் என்றும் சர்க்கார் கூறுகிறது.

2½ கோடி டாலரில் பாதாள இரயில்வே

நிர்மாணிக்க 5-ஆண்டுகள் ஆயிற்றும்!

5¾ மைல் நீளமுள்ள புதிய பாதாள இரயில்வே ஒன்று, டோக்கியோவில் இயங்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இரயில் வண்டிகள் சிவப்பு வர்ணமும், வெள்ளை வர்ணமும் தீட்டப்பட்டுள்ளன; அவை செல்லும் குகை வழிகளின் சுவர்கள் 'கிரையான்' வர்ணங்களால் தீட்டப்பட்டுள்ளன

இந்தப் பாதாள இரயில் பாதையை அமைக்க 5 வருடமும், 2½ கோடி டாலரும் ஆகியிருக்கின்றனவாம்!

இந்தி மொழியின் இன்றைய நிலைமை

ஆட்சி மொழியாகப் போதுமானதா?

ஐதராபாத்தில் சர்க்கார் மொழி பெயர்ப்பாளர் உத்தியோகத்திற்கு நபர்கள் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெற்ற மூன்று தேர்வுகளில் கலந்துகொண்ட 13 பேர்களில் யாருமே தேறவில்லையாம்!

இதன் விளைவாக, இந்த உத்தியோகத்திற்கு யாரையுமே சர்க்கார் சிபாரிசு செய்ய முடியவில்லை.

மனு போட்டவர்களின் இந்தி பற்றிய பொது அறிவு மிகவும் குறைவாக இருப்பதாக தேர்வுக் குழு எடுத்துக்காட்டியுள்ளது.

இந்த ரீதியில் இந்தி பரவினால் குறிப்பிடப்பட்ட காலமாகிய 15 ஆண்டிற்குள் இந்தியை அரசாங்க மொழியாக்க முடியுமா என்பது பற்றித் தாங்கள் சந்தேகிப்பதாகக் குழு தன் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

உருக்குத் தொழில் நுட்பச் சிப்பந்திகளுக்குப் பயிற்சி

புதுடில்லி, ஜூலை 35—

இந்தியாவில் நிர்மாணிக்கப்படவிருக்கும் உருக்குத் தொழிற்சாலைகளுக்காக இதுவரையில் 159 என்ஜினீயரிங் பட்டதாரிகள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனராம்.

ரூர்கேலா உருக்குத் தொழிற்சாலைத் திட்டம் சம்பந்தமாகப் பயிற்சி பெறுவதற்காக 79 பயிற்சியாளர்கள் மேற்கு ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும், மேலும் 11 பேர் ஜாம்ஷெட்பூரிலுள்ள டாடா இரும்பு—உருக்குத் தொழிற்சாலையில் பயிற்சிபெற்று வருகின்றனர் என்றும், மக்கள் சபையில் இரும்பு—உருக்கு அமைச்சர் தகவல் தந்தார்.

'கல்வியோடு ஏகாதிபத்திய வெறுப்பையும் ஊட்டுக'

எகிப்திய ஆசிரியர்களுக்குக் கல்வி மந்திரி யோசனை

கெய்ரோ, ஜூலை 23—

"அரேபியக் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டும்போது, ஏகாதிபத்திய வெறுப்பையும் ஆசிரியர்கள் சேர்த்துப் புகட்ட வேண்டும்,"

என்று, எகிப்திய கல்வி மந்திரி மேஜர் கமால் எல்தின் உசேன் எகிப்திய ஆசிரியர் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

"அரேபியர்களுக்கும் — ஏகாதிபத்தியவாதிகளுக்கும் இடையில் உள்ள யுத்தம் இன்னும் ஓய்ந்துவிடவில்லை"

என்றும் அவர் கூறினாராம்.

நேருவைத் திகிலடையச் செய்த தேஷ்முக் குற்றச்சாட்டுகள்

நேரிடையான பதிலளிக்காது மழுப்பல்

நிதி மந்திரியாயிருந்து விலகிக் கொண்டிருக்கிற தேஷ்முக், தாம் பதவியைத் துறந்ததற்கான காரணங்களை விளக்கி மக்கள் சபையில் தாக்கல் செய்த அறிக்கைக்குப் பதில் அளிக்கும் வகையில் பிரதமர் பண்டித நேரு ஏதேதோ பேசியிருக்கிறார்; அவர் பேசும் போது, பலமாகத் தாக்கப்பட்டதினால் ஏற்பட்ட களைப்போடு பேசினாராம்.

முன்னாள் நிதி மந்திரியின் குற்றச்சாட்டுகள் என்ற வகையில் தேஷ்முக் கூறியவற்றிற்கு, பிரதமர் என்ற முறையில் இடிவிழுந்த நாகம்போல் நடுங்கிப்போன நேரு அளித்துள்ள பதிலின் சாரம் கீழே தரப்படுகிறது:—

“நியாயமான உடன்பாடு ஏற்படுவதற்கே நான் எப்போதும் உழைத்து வந்திருக்கிறேன்; பம்பாய் பற்றிய அறிவிப்பு நானாகச் செய்த முடிவல்ல.

“பம்பாயின் எதிர்காலம் 5 ஆண்டுகளுக்குப் பிறகு, பம்பாய் மக்களால் முடிவு செய்யப்படலாம் என்பது ஒன்றுதான், நானாக, அதிகப்படியாகக் கூறியது.

“மாநில சீரமைப்புமசோதாமீது செய்யப்பட்ட பல்வேறு முடிவுகள், குறிப்பாக பம்பாய் நகரம் பற்றிய முடிவு, மந்திரி சபையைக் கலக்காமல் செய்யப்பட்டதாகக் கூறுவது உண்மையல்ல.

“கனம் உறுப்பினர் குறிப்பிட்டிருக்கும் எல்லா தகவல்களும் முழுதும் உண்மையல்ல.

“எனது நண்பர் கிளப்பியுள்ள பிரச்சினைகளின் தாரதம்யம் பற்றி நான் எதும் கூறப் போவதில்லை.

“என்னுடைய பொறுப்பான நடவடிக்கைகளை கனம் உறுப்பினர் கண்டித்திருக்கிறார். அதற்கு முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். பிரதமர் என்ற முறையில் அந்தப் பொறுப்பினை நான் ஏற்கத்தான் வேண்டும். ஆனால் இது குறித்த சர்ச்சையில் இறங்க எனக்கு விருப்பமில்லை.

“1955 நவம்பரிலும், 1956 சனவரியிலும் பம்பாயில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்களைக் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை குறித்து ஜாக்கிரதையாக ஆராய்ந்தோம்; பல சாக்ஷிகளைக் கலந்து ஆலோசித்தோம். அது போன்றதொரு நீண்ட விசாரணை நடத்தினால், பம்பாயில் பல்வேறு வகுப்பினர்கள், கோஷ்டிகளுக்கிடையே நல்லுறவு ஏற்படுத்தும் எமது பிரதான நோக்கத்திற்குக் குந்தகம் ஏற்படும் என்ற முடிவுக்கு வந்தோம். மீண்டும் நல்லுறவு ஏற்படுத்துவதற்காக பிரதானமாக பாடுபட வேண்டும் என்று கருதினோம்.

“கடைசியாக, இந்த முறையில் நாம் பிரிய நேரிடுவதற்கு எனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.”

எதிர்த்துப் பேசலாமாம்!

ஆனால் வாக்களிக்கக் கூடாதாம்

மக்கள் சபையில் விவாதிக்கப் பட்டுவரும் பீகார்-மேற்கு வங்காள மாநில சீரமைப்பு மசோதா மீது பீகார் காங்கிரஸ் உறுப்பினர்கள் தமது மனச்சாட்சிப்படி ஓட்டளிக்க அனுமதிக்கப் படமாட்டார்கள் என்று தெரிகிறதாம்.

பீகார் சட்டசபையில் இம்மசோதா நிராகரிக்கப்பட்டது. மாநில மந்திரிகளும் மசோதாவை எதிர்த்து வாக்கு அளித்தனர். இதையொட்டியே மக்கள் சபையிலுள்ள பீகார் காங்கிரஸ் உறுப்பினர்கள் தங்களுக்கு ‘வாக்கு’ சுதந்திரம் வேண்டுமென்று கோரினர்.

உறுப்பினர்கள் தமது கருத்தைத் தெரிவிப்பதற்கு ஒன்றும் கட்டுப்பாடு இராது; ஆனால், சர்க்காரை ஆதரித்துத்தான் வாக்களிக்க வேண்டும்.

இன்ஷ்யூரன்ஸ் நிறு......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கான கணக்கு என்றும் மந்திரி தெரிவித்திருக்கிறார்.

“இந்தக் கணக்கினை மனதில் [illegible] ”வமான தொகை [illegible] தாக இன்ஷ்யூரன்ஸ் தேசியமயமாக்கப்படும் மசோதா மீது பேசிய நிதி மந்திரி தேஷ்முக் கூறினாரா?” என்று ஒருவர் கேட்டாராம்.

“இல்லை; இந்தத் தொகை, நிர்வாகத்தினை சர்க்கார் ஏற்றதும் கண்டுபிடிக்கப்பட்டது; இனி கண்டுபிடிக்கப்பட வேண்டியது வேறு உள்ளது,” என்றும் மந்திரி ஷா விளக்கம் கூறியிருக்கிறார்

நடைபாதையில் விற்பனை செய்வோர் நிலை என்ன?

சென்னை, ஜுலை 26—

ஜார்ஜ் டவுன் பகுதியில் ரோடு ஓரங்களிலும், நடைபாதைகளிலும் கடைகளைப்பரப்பி விற்பனை செய்வதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி போலீஸ் கமிஷனரை சர்க்கார் கேட்டுக் கொண்டிருக்கிறார்களாம்.

260 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

சென்னை, ஜுலை 26—

தண்டையார்பேட்டையிலுள்ள கணேசர் அலுமினியம் தொழிற்சாலையைச் சேர்ந்த 260 தொழிலாளர்கள் இன்று காலையில், உள்ளிருந்து வேலைநிறுத்தம் செய்தனராம்; போனஸ் தரப்பட வேண்டுமென்பது இவர்களது கோரிக்கையாகும்.

இந்தியா—திபேத் இணைப்பு பாதைகள் அமைப்பு வேலைகளுக்காக இதுவரையில் ரூ. 71,26,00,000 செலவழிக்கப்பட்டிருக்கிறது.

வழங்காத அதிகாரத்தை...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

“இந்த மனப்பான்மை கொண்டவர்களுடன் நான் சம்மந்தப்பட்டிருக்க முடியாது. இத்தகைய பல விஷயங்களை நான் பிரதம மந்திரியின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன்; இது குறித்து அவர் காட்டும் அக்கரையின்மை எனக்குப் பெரும் அதிருப்தியைத் தந்திருக்கிறது என்றும் தெரிவித்தேன்.

“வேறு எந்த நாகரிக நாட்டிலும், சம்பவம் குறித்துச் சட்டபூர்வமாக விசாரணை நடந்திருக்கும் என்பதையும் எடுத்துக் காட்டினேன்.

“1955 நவம்பரில் நடைபெற்ற பலத் துப்பாக்கிப் பிரயோகங்களுக்கு நியாயமே இல்லை என்று மரண விசாரணை அபிப்பிராயம் தெரிவிக்கப் பட்ட பிறகும், விசாரணை நடத்தும் உத்தேசம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

“மந்திரி சபையின் அதிகாரங்களை ஒரு உள்கோஷ்டி அத்து மீறி பறித்துக் கொண்டது — பம்பாய் போலீசார் தம்மிஷ்டப்படி நடந்துகொள்ள அனுமதித்ததின் மூலம் பிரஜா உரிமைகளை மறுத்தது ஆகியவை எல்லாம் பெரிய விஷயங்கள்.”

கழகக் கூட்டங்கள்

★

இராசபாளையம்:
பஸ் நிலையம் கிழ்ப்புறமுள்ள திடலில்
29—7—56 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
மு. கருணாநிதி
எஸ். முத்து

★

சத்திரப்பட்டி:
நடுத்தெரு
29—7—56 இரவு 9 மணிக்கு
தலைவர்:
கே. மகாலிங்கம்
பேசுவோர்:
மு. கருணாநிதி
எஸ். முத்து
ஏ. திராவிடமணி
சி. பி. அண்ணாமலை
ஆர். கே. துரை

★

இராசிபுரம்:
சந்தைப்பேட்டையில்
29—7—56 மாலை 6 மணிக்கு
பேசுபவர்:
ஈ. வெ. கி. சம்பத்

★

போளூர்:
பழைய பஸ் நிலையத்தில்
29—7—56 மாலை 6 மணிக்கு
தலைவர்:
எஸ். கணபதி
பேசுவோர்:
கண்ணதாசன்
எஸ். எஸ். தென்னரசு
தமிழ்ப்பித்தன்

★

மங்கலம் கிராமம்:
தி. மு. கழகத் துவக்க விழா
29—7—56 மாலை 5 மணிக்கு
தலைவர்:
எம். தர்மலிங்கம்
பேசுவோர்:
ப. உ. சண்முகம்
நெடுஞ்செழியன்
வ. குமாரசாமி

★

தாராபுரம்:
இஸ்லாமியாபேட்டை
29—7—56 மாலை 6 மணிக்கு
தலைவர்:
மே. சி. சிதம்பரனார்
பேசுவோர்:
கி. மனோகரன்
வி. சண்முகநாதன்

★

நாகமநாய்க்கன்பட்டி:
30—7—56 இரவு 7-மணிக்கு
தலைவர்:
கே. எஸ். சீரங்கராயர்
பேசுவோர்:
கி. மனோகரன்
வி. சண்முகநாதன்

★

சங்கரநயினார்கோவில்:
காந்தி திடலில்
30-7-56 மாலை 6-30 மணிக்கு
தலைவர்:
டி. ஆர். சுப்பிரமணியம்
பேசுவோர்:
மு. கருணாநிதி
எஸ். முத்து
முல்லை—சத்தி
சி. எஸ். பழனியப்பன்

★

கொட்டாரக்குடி:
30—7—56 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
ஜம்பு

மும்முனைப் போராட்ட நினைவு நாள் பொதுக்கூட்டம்

29—7—56 மாலை 6-மணியளவில், மதுரை மறுமலர்ச்சிக் கழகச் சார்பில், மும்முனைப் போராட்ட நினைவு நாள் பொதுக்கூட்டம் வடக்குமாசி வீதியில் உள்ள கழகத்தின் முன்னிலையில், தோழர் மா. நீ. மாயன் தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் டி. கே. சீனிவாசன், முகவை ஆர். எஸ். பாண்டியன், எஸ். முத்து ஆகியோர் பேசுவர்.

பம்பாய் - மாதுங்கா தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

29—7—56 காலை 10 மணியளவில், பம்பாய் - மாதுங்கா தி மு. கழகச் செயற்குழுக் கூட்டம் பி. பி. மாதுங்கா இலாவியா கட்டிடம், எண். 56 இல்லத்தில் நடைபெறும் அதுபோது பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

இலக்குமணபுரி— பெங்களூர் தி. மு. க. தோழர்களுக்கு:

29—7—56 பகல் 1 மணிக்கு, பெங்களூர்-இலக்குமணபுரி தி மு கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்; அதுபோது அண்ணா அவர்களின் பெங்களூர் மாவட்ட சுற்றுப் பயணம் குறித்து மாவட்டக் கழகம் விடுத்திருக்கும் அறிக்கை, மற்றும் கழக ஆக்க வேலைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

செங்கற்பட்டு மாவட்ட தாழ்த்தப்பட்டோர் சம்மேளன மாநாடு

29—7—56 காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரையில், காஞ்சீபுரம் சர்வதீர்த்த குளத்தை அடுத்த புத்தேரியில் அமைந்துள்ள கெங்காதரன் திடலில், திரு ஏ. இரத்தினம் எம் எல்.ஏ., அவர்கள் தலைமையில், மேற்படி மாநாடு நடைபெறும்.

திரு. கே. எம். சாமி கொடியேற்றி விழாவாற்றுவார்; திரு ஜே. சி. ஆதிமூலம் மாநாட்டைத் திறந்து வைப்பார்; திரு சி. எம். மணவாளன் அம்பேத்கார் படத்தைத் திறந்து வைப்பார்

திருவாளர்கள் வி. வீராசாமி எம்.பி., என். சிவரத்தினம், சி. எம். நாகப்பா, எம். சுந்தர்ராஜ் எம்.சி., சி. ஆறுமுகம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

வள்ளுவர் வாரமும் – கழக முதலாண்டு விழாவும்

28—7—56 மாலை 6 மணியளவில், சென்னை - இராயபுரம் திருவள்ளுவர் முன்னணிக் கழகச் சார்பில் இராயபுரம்—மாதா கோவில் திடலில், தோழர் தி. ந. மதிவாணன் தலைமையில் நடைபெறும். பேராசிரியர் க. அன்பழகன், திரு அ. ச. நடராசன், திரு. ரெவ ஸ்தென் விஸ்லாஸ், திரு ப. தங்கராசன் எம். சி., ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

திருவள்ளுவர் திருநாள்

29—7—56 காலை 10 மணிக்கு, பெங்களூர் — அக்கிப்பேட்டை தி மு கழகப் பணிமனையில், தோழர் சி. என். சாமி தலைமையில், ‘திருவள்ளுவர் திருநாள்’ கொண்டாடப்படும்.

திருக்குறள் வகுப்பு

28—7—56 மாலை 7 மணிக்கு, சென்னை - இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில், கல் மண்டபம், நகராண்மைக்கழக ஆண் பள்ளியில், திரு அ. ஞானசுந்தரம் அவர்கள், ‘அறன் வலியுறுத்தல்’ எனும் அதிகாரத்திற்குப் பொருள் கூறி விரிவுரையாற்றுவார்.

த. நா. தாழ்த்தப்பட்டோர் சம்மேளனச் செயற்குழு

“29—7—56 பகல் 1 மணிக்கு, காஞ்சீபுரம் சர்வதீர்த்த குளத்திற்கும்—புத்தேரி கிராமத்திற்கும் இடையே அமைந்துள்ள வீர கெங்காதரன் திடலில், மேற்படி செயற் குழுக் கூட்டம் நடைபெறும் அம்பேத்கார் அவர்களின் தமிழகச் சுற்றுப் பயணம், அடுத்த பொதுத் தேர்தலில் சம்மேளனத்தின் செயல்முறை, சம்மேளனத்தின் எதிர்கால வேலைகள், மற்றும் தனி நபர்கள் கொண்டுவரும் தீர்மானங்கள் ஆகியவை குறித்து முடிவு செய்யப்படும்,” என்று, தோழர் ஆ இரத்தினம் எம்.எல்.ஏ. அவர்கள் அறிவிக்கிறார்.

சென்னை 16-வது வட்டத் தோழர்கள் பிரச்சாரம்

28—7—56 மாலை 8 மணிக்கு, சென்னை 16-வது வட்ட தி. மு கழகப் பணிமனையிலிருந்து கழகத் தோழர்களும், திருவள்ளுவர் முன்னேற்றக் கழகத் தோழர்களும் புறப்பட்டு, ‘பொதுத் தேர்தலில் மக்கள் கடமை’ என்பதைப் பற்றி 16-வது வட்டம் முழுமையிலும், மற்றும் பல பகுதிகளிலும் பிரச்சாரம் செய்வர்.

‘காங்கிரசை முறியடிக்க இடதுசாரிகள் ஒன்றுபடவேண்டும்’

அரசியல் துறவி ஜெயப்பிரகாஷ் யோசனை

பாட்னா, ஜுலை 26—

அரசியலைத் துறந்துவிட்ட ஜெயப்பிரகாசர், காங்கிரசை ஆட்சிப்பொறுப்பிலிருந்து அகற்றுவதற்கு யோசனைகூற முன்வந்துள்ளார்.

“தேர்தல் காலத்தில் இடதுசாரிக் கட்சியினர், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஒன்றுபட வேண்டும்” என்று இங்கு கூறியிருக்கிறார்.

பீகார் மாநிலத்தைச் சேர்ந்த சுமார் 1000 பி சோ. கட்சியினரிடை பேசுகையில்தான் அவர் அவ்வாறு கூறியிருக்கிறார்.

‘இந்த உபதேசம் — யோசனை, பி. சோ. நிர்வாகக் குழுவின் கயா தீர்மானத்திற்கு முரணானது’ என்று சில பி. சோ.-க்கள் கருத்தறிவித்திருக்கின்றனர்.

வேறு சில உறுப்பினர்கள், ‘நாராயணன், சரியான நேரத்தில் தான் யோசனை கூறியிருக்கிறார்; இந்த யோசனைப்படி நடக்காவிட்டால் கட்சி அழிந்துபடும்’ என்று கூறியிருக்கிறார்கள்

எவ்வளவு தெரியுமா?

“இந்திய டெலிபோன் தொழிற்சாலையின் சிப்பந்திகளுக்கு 268 வீடுகளும், அதிகாரிகளுக்கு 14 வீடுகளும் கட்டப்பட்டிருக்கின்றன” என்று மத்திய செய்திப் போக்குவரத்து மந்திரி மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

சென்னை தாய்மார் கழகம்

28-7-56 மாலை 2-30 மணிக்கு, சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை தாய்மார் கழகச் சார்பில் முத்துக்கிருஷ்ணன் தெரு, எண். 15 இல்லத்தில், பேராசிரியர் மயிலை-சிவமுத்து அவர்கள், திருக்குறளில், ‘இடுக்கணழியாமை’ என்ற அதிகாரத்தை விளக்கிச் சொற்பொழிவாற்றுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.